

பெனாஸிர்,
முகம்மது உமர்

# “காஞ்சிபுரம் தேவநாதனால் மதம் மாறினேன்”

## – ஓர் இளைஞரின் அதிரடி!

**ச.அய்யப்பன்**

“முஸ்லீம் மதத்திற்கு மாறிய இந்து இளைஞனின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியை இந்துக்களுக்குச் சொந்தமான சமூகக் கட்டிடத்தில் நடத்தக்கூடாது” என்று ஒரு பெரும் போராட்டமே நடந்துள்ளது.

தஞ்சை மாட்டம், கும்பகோணம், துவரங்குறிச்சியைச் சேர்ந்தவர் இந்திரா. இவர் அ.தி.மு.க. மகளிரணி நகரத் துணைத் தலைவராக பதவி வகிக்கிறார். பட்டு நெசவுத் தொழிலை பிரதானமாகக் கொண்ட சௌராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்தவர். இவரின் மூத்த மகன் குமரன். எம்.பி.ஏ. வரை படித்தவர், சென்னையில் ஹோட்டல் நடத்தி வந்தார். அங்கே ஹாஜா மொய்தீன் - அவ்லா பீவி தம்பதியின் இரண்டாவது மகளான பெனாஸிருடன் குமரனுக்குக் காதல் பிறந்தது. இதையடுத்து முஸ்லீம் மதத்தைத் தழுவிய குமரன், தனது பெயரை முகம்மது உமர் என்று மாற்றிக் கொண்டார். இருவீட்டார் சம்மதத்துடன் சென்னையில் ஜாம் ஜாமென்று திருமணமும் நடந்தது. தனது மகனின் திருமண வரவேற்பை சொந்த ஊரான கும்பகோணத்தில் தடபுடலாக நடத்த நினைத்தார் இந்திரா. துவரங்குறிச்சியில் உள்ள சௌராஷ்டிரா சபையில்தான் இந்த வரவேற்பு நிகழ்ச்சியை நடத்துவதாக ஏற்பாடு. ஆனால், “முஸ்லீமின் வரவேற்பு நிகழ்ச்சிக்கு இந்து சம்பிரதாய சபா கட்டிடத்தில் இடமா?” என்று கொதித்தெழுந்த இந்து இயக்கங்கள், திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பெரும் கலாட்டா செய்துவிட்டன, உண்ணாவிரதம் இருந்து பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இதுபற்றி நம்மிடம் பேசிய இந்திரா, “என் மகனின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக நான்காயிரம் ரூபாய் பணம் கட்டி சௌராஷ்டிரா சபையை புக் பண்ணினோம். ஏற்கெனவே பிற மதத்தினர் இந்த சபையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். ஆனால் எனது மகனின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியை அங்கே நடத்தக் கூடாது என்று இந்து அமைப்புகள் கலாட்டா செய்தன. எனது மகன் பிறந்து வளர்ந்த மண்ணில் அவனது திருமண வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தவிடாமல் தடுப்பதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? எனக்குள்ள அரசியல் செல்வாக்கைத் தடுக்கும் விதத்தில் பா.ஜ.க.தான் இதைத் திட்டம் போட்டு செய்துள்ளது.இப்போது வேறு ஒரு மண்டபத்தில் திருமண நிகழ்ச்சியை நடத்தியுள்ளேன். இதனால் எனக்கு இரட்டிப்பு செலவு ஆகிவிட்டது” என்று வருத்தப்பட்டார்.

நாம் முகம்மது உமரிடம் பேசினோம். அவர், “நான் இந்து மதத்தின் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தேன். சென்னையில் வேலை பார்த்த போது ஏற்பட்ட முஸ்லீம் நண்பர்கள் நட்பும், குர்-ஆன் மீது ஏற்பட்ட ஈடுபாடும் எனக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. காஞ்சிபுரம் தேவநாதன், கோயில் கருவறையில் நடத்திய அசிங்கமும் என்னைப் பெரிதும் பாதித்தது. இதனால்தான் நான் மதம் மாறி என்னை சுன்னத் ஜமாத்தில் இணைத்துக் கொண்டேன். மதம் மாறுவது என் உரிமை. யாரும் என்னை மாற்றவில்லை. இந்நிலையில் எனது தாயும், உறவினர்களும் ஆசைப்பட்டு நடத்திய வரவேற்பு விழாவை இந்து அமைப்புகள் கொச்சைப்படுத்தியது வருத்தமாக உள்ளது” என்று வேதனைப்பட்டார்.



இந்திரா

அடுத்து நம்மிடம் பேசிய மணமகள் பெனாஸிர், “எங்கள் இருவீட்டார் சம்மதத்துடன்தான் இந்தத் திருமணம் நடந்தது. என்னை வேறு மதம் என்று பிரித்துப் பார்க்காத, பாச நெகிழ்வான குடும்பத்தில் புகுந்ததை நினைத்துப் பெருமைப்படுகிறேன்” என்றார் உருக்கமாக.



ரமேஷ்

வரவேற்பு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திய பா.ஜ.க. நகர அமைப்புச் செயலாளர் டி.ஆர். ரமேஷ் என்ன சொல்கிறார்?

“60 ஆயிரம் சௌராஷ்டிரா மக்கள் வாழும் இந்த ஊரில், குமரன் முஸ்லீமாக மாறி முஸ்லீம் பெண்ணை மணந்ததை யாரும் ஏற்கவில்லை. இதை ஒரு முன்மாதிரியாக மற்ற இளைஞர்கள் எடுத்துக் கொள்வார்கள். ஆகவேதான் எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தோம். ஒரு விழிப்புணர்வுக்காகத்தான் ‘சௌராஷ்டிரா சமூக விழிப்புணர்வு இயக்கம்’ என்ற பெயரில் உண்ணாவிரதம் அறிவித்தோம். வரவேற்பு விழாவைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கில் இதைச் செய்யவில்லை. எங்கள் சபாவில் வரவேற்பு நடத்தக்கூடாது என்று பலரிடம் கையெழுத்து வாங்கிக் கொடுத்தோம். சபா நிர்வாகிகள் அதை நடத்த அனுமதி தந்தது தவறு” என்று ஆவேசப்பட்டார்.



துளசிராமன்

சௌராஷ்டிரா சபா நிர்வாகக் குழு உறுப்பினரும், அப்பகுதி நகர் மன்ற உறுப்பினருமான எஸ்.ஹெச். துளசிராமனிடம் பேசினோம்.

“எங்களது சபாவில் வரவேற்பு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்றுதான் இந்திரா முதலில் கேட்டார். பிறகு பத்திரிகையைப் பார்த்த பின்பு தான் முஸ்லீம் திருமண வரவேற்பு என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் எங்கள் சபா கட்டிடத்தை வாடகைக்குக் கொடுக்கும்போது மதம், ஜாதி பார்ப்பது இல்லை. எங்கள் சமூக இளைஞர் முஸ்லீம் ஆனதால்தான் இத்தகைய பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. பா.ஜ.க. இதை அரசியலாக்கிவிட்டது. அதேசமயம் மதம் மாறியதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை” என்றார்.

மதம் மாறியதால் ஏற்பட்ட டென்ஷன் இன்னும் அடங்கவில்லை என்பதே லேட்டஸ்ட் நிலவரம்.

▲